# காமின் தவறும் கானானுக்கு கொடுக்கப்பட்ட சாபமும்

**ஆதியாகமம் 9:20-27**

1. இந்த நிகழ்வை பற்றி பலருக்கும் பலதரப்பட்ட கருத்துக்கள் உள்ளன. நமக்கு தேவன் கிறிஸ்துவின் மூலம் அருளிய (கிறிஸ்து = தலையும் + சரீரமும்) வெளிச்சத்தின் மூலம் இந்த காரியத்தை ஆராய்ந்து பார்ப்போமாக.

2. நோவா திராட்சை ரசம் குடித்து வஸ்திரம் விலகி படுத்திருந்தபோது, நோவாவின் குமாரனாகிய காம், நோவாவின் நிர்வாணத்தை பார்த்தது தொடர்பாக முதலில் நோவாவையும் தவறாக குற்றப்படுத்தலாம். அதாவது நோவா ஏன் திராட்சை ரசம் குடித்து வெறிக்க வேண்டும் என்று கேட்கலாம்.

3. நாம் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், இந்த சம்பவம் நிகழ்ந்த காலம் ஜலப்பிரளயத்திற்கு பிறகு ஆகும். ஏனெனில் ஜலப்பிரளயத்திற்கு முன்பு பூமி எங்கும் நல்ல சீதோஷ்ண நிலை இருந்தமையால் திராட்சை ரசம் நொதித்திருக்க (Fermentation) வாய்ப்பில்லை. இப்போதுதான் முதன் முதலில் திராட்சை பயிரிடப்பட்டிருக்க கூடும். ஆகவே ஜலப்பிரளயம் வந்து பூமியின் மீது இருந்த கடைசி நீர் விதானம் (Canopy) வீழ்ந்ததின் காரணமாக போதையை (வெறிக்க செய்யும்) உண்டாக்கும் அந்த காரியத்தை (Intoxication Process) பற்றி நோவா அறியாதிருந்திருக்க வேண்டும். ஆகவேதான் திராட்சை ரசத்தை குடித்த போது, அவர் அதனால் வெறித்து, வஸ்திரம் விலகி படுத்திருந்தார் என்று நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம் (வச 21). நோவா இந்த காரியங்களை அறியாதிருந்தார் என்பதை வலியுறுத்தி காண்பிக்கவே இந்த விவரங்களை இங்கு பார்க்கிறோம்.

4. இந்த சந்தர்ப்பத்தில் நோவாவின் குமாரரில் ஒருவனாகிய காம், தன் தகப்பனுடைய நிர்வாணத்தை கண்டு, அதை தன் சகோதரரிடத்தில் கூறினான் என்றும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். நாம் வேதாகமத்தை மட்டும் கவனிக்கக்கடவோம்.

ஆக இந்த விஷயம் தெரிந்த நோவாவின் மற்ற குமாரர்களாகிய சேமும், யாப்பேத்தும் *"ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை"* (வச 23) என்று பார்க்கிறோம்.

5. எனவே இங்கு காம் செய்த தவறு தன்னுடைய தகப்பனுடைய நிர்வாணத்தை கண்டப்பின்னர், சேமும் யாப்பேத்தும் எப்படி பின்னிட்டு வந்து தங்கள் தகப்பனின் நிர்வாணத்தை மூடினார்களோ அதன்படி செய்யாமல், அவன் இதுபற்றி பரியாசம் செய்ததுபோலவே தெரிகிறது. இதுவே காமுடைய தவறு. இதில் நாம் ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாதிருக்ககடவோமாக. பின்னர் இந்த விஷயம் தெரிந்த நோவா, காம் செய்த இந்த காரியத்திற்காக அவனுடைய குமாரனாகிய கானானை சபித்தார் என்றும் நாம் பார்க்கிறோம்.

6. நோவா ஏன் காம் செய்த தவறுக்கு கானானை சபிக்கவேண்டும் என்ற கேள்வி நமக்கு எழுகிறது. இதற்கு நமக்கு நேரடியான எந்த பதிலும் வேதாகமத்திலிருந்து தெரியவில்லை. ஆனால் சில காரணங்களை கொண்டு இதனை அறியலாம். நோவா ஏற்கனவே தன் மூன்று குமாரர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 9:1). இதனாலேயே காமை சபிக்காமல், கானானை சபித்திருக்க கூடும் (அல்லது) ஒருவேளை காம் செய்த இந்த துன்மார்க்கத்தில் (தன் தகப்பனுடைய நிர்வாணத்தை பார்த்து அதை பரிகசித்தது) கானானிற்கும் உடன்பாடு இருந்திருக்கலாம். எனினும், இவைகளை பற்றி நாம் அறியோம்.

7. ஆனால், இது நோவா கொடுத்த சாபம் என்ற ஒரு கோணத்தில் பார்க்கிற நாம், அப்படியே ஏன் அவர் இதனை ஒரு தீர்க்கதரிசனமாக குறிப்பிட்டிருக்கக்கூடாது? என்று யோசித்து பார்க்கும்போது, இங்கு நோவா, தம்முடைய மூன்று குமாரரும் செய்த கிரியைகளுக்கொத்த வார்த்தைகளை அதாவது அவர்கள் செய்த கிரியைகளுக்குதக்கபடி, பின்பு அவர்களுடைய சந்ததிக்கு சம்பவிக்கப்போவதை பற்றி தீர்க்கதரிசனமாக ஏன் சாட்சிபடுத்தியிருக்க கூடாது? என்பதை சிந்தித்து பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

8. காம் தன்னுடைய தகப்பனுக்கு அவமரியாதையை உண்டுபண்ணினான். ஆனால் சேமும், யாப்பேத்தும் தங்கள் தகப்பனிடத்தில் நாகரிக பண்புடனும் (Decency), மதிப்பு மரியாதையுடனும் (Respect) மற்றும் கீழ்ப்படிதலுடனும் (Obedience) நடந்து கொண்டார்கள் (அதாவது தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை காணாது, வஸ்திரத்தை எடுத்து பின்னிட்டு வந்து அதனை மூடின இவர்களது செயல்). எனவே, காமுடைய குமாரனாகிய கானானுக்கு சாபத்தை முன்மொழிந்த அதே நோவா, சேம் மற்றும் யாபேத்தை (கவனமாக வேத வசனத்தை கவனித்து பார்க்கும்பொழுது அவர்களின் சந்ததியை பற்றியும் பேசுவதை காணமுடியும்) ஆசீர்வதிக்கிறார் (Vs.26,27). ஆக இவர்களுடைய சந்ததி, பின் வரும் காலங்களில் எப்படி இருக்கப்போகிறது என்பது பற்றி தீர்க்கதரிசனமாக உரைத்தது போலவே இது உள்ளது.

9. காமின் சந்ததியை பற்றி நாம் பார்க்கும் போது அதன் துன்மார்க்கத்தை பற்றி நாம் வேதவாக்கியங்களிருந்து காணலாம். காமின் மற்றொரு குமாரனாகிய கூஷ் என்பவனின் குமாரன் தான் நிம்ரோத். இந்த நிம்ரோத்தே பல தெய்வ வழிபாட்டிற்கு (Polytheism) மூல காரணமானவன் ஆவான்.

***<u>கானான்</u>***

10. தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு கானானியர் உள்ளிட்ட மற்ற ஜாதியினர் குடியிருக்கும் கானான் தேசத்தை சுதந்திரமாக கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். இந்த கானான் தேசத்தில் ஏழு வகையான கானானிய ஜாதியினர் குடியிருந்தனர். அவர்கள் ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் ஆவர் (உபா 7:1; யோசுவா 3:10;24:11). இந்த கானானியரை முழுவதுமாக துரத்திவிடுவதாக தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு வாக்களித்து, இப்படியாக உண்மையிலேயே அவர்களை முற்றிலும் துரத்தி, அழித்துப்போட்டதையும், மேற்கூறப்பட்ட வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

11. ஏன் இந்த ஜாதியினரை முற்றிலுமாக தேவன் வேரறுக்க சொல்லுகிறார் என்றால், இவர்கள் ஒழுக்க ரீதியில் அதாவது சன்மார்க்க காரியத்தில் முற்றிலும் தாழ்ந்த நிலையிலிருந்தவர்கள் ஆவர். ஒழுக்க ரீதியில் இழிவானவர்களாகவும், மிகவும் சீர்கெட்டு போன ஜனங்களாகவும்

இருந்தனர் (Vile and debase morally). இவர்கள் மிகுந்த விக்கிரகாராதனைக்காரர்களாக இருந்ததோடு, பிரமானமற்றவர்களும் தகாத காரியங்களை செய்த ஜாதிகளாகவும் இருந்தனர் (லேவி 20:22-24; உபாகமம் 9:4; 12:31). இதில் இன்னும் சரித்திர சம்பந்தமாகவும், அகழ்வாராய்ச்சியின் மூலமும் கிடைத்த ஆதாரங்களின் படி இவர்களுக்கு பால்வினை நோய்கள் (Veneral diseases), அதாவது தகாத உறவின் மூலம் வரும் வியாதிகள் இருந்ததும் தெரிய வருகிறது. இப்படிப்பட்ட சீர்கெட்டு போன நிலையில் இருந்தவர்களாதலால் தான், முற்றிலுமாக இந்த ஜாதியினரை அழித்து போட்டு அந்த தேசத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு தேவன் சுதந்தரமாக கொடுத்தார்.

12. இவர்கள் பாவத்தில் முற்றிலும் Advantage எடுத்துக்கொண்டவர்கள். அதனால் இந்த கானான் தேசத்தில் இனி இவர்கள் சுதந்தரமாக இருப்பதற்கு கூடாது என்பதினால் இவர்களை வேரறுக்க சொல்லுகிறார். எந்தெந்த ஜாதிகளை முற்றிலுமாக வேரறுக்க சொல்லுகிறார் என்பதை உபாகமம் 20:10-18-ல் காணலாம். ஏன் தேவன் இவ்வளவு காலம் இப்படிப்பட்ட சீர்கெட்டு போன ஜாதியினரை விட்டு வைத்திருக்க வேண்டும் என்று நாம் பார்க்கும்போது, ஒவ்வொருவரின் பாவமும் நிறைவாகும் வரைக்கும் அவர் அவர்களை விட்டு வைக்கிறார் என்று பார்க்கிறோம். இதனை பற்றி தெளிவாக ஆதியாகமம் 15:16 ல் வாசிக்கும்போது "நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார்". ஒவ்வொரு ஜாதியும் தங்கள் தங்கள் பாவத்தின் போக்கில் போக அனுமதிக்கப்பட்டு பின்னர் அது முற்றிலுமாக நிறுத்தப்பட்டு போனது. ஆக அன்று ஆபிரகாமுடைய நாளில் அல்லாமல் அவருடைய நான்காம் தலைமுறையில் தம்முடைய ஜனங்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்கு கொண்டு வந்ததின் காரணம் என்னவென்றால், இன்னும் எமோரியரின் பாவம் நிறைவாகாதது தான் . இவர்கள் பாவம் நிறைவானபோது (உச்சக்கட்டத்திற்கு சென்றபோது) தேவன் இவர்களை வேரறுத்து விட்டார்.

13. ஆகவே இப்படிப்பட்ட இந்த கானானியரின் ஜாதிகளின் சீர்கெட்ட நிலையையே நோவா முன்னறிவித்திருக்க கூடும் என்ற கண்ணோட்டத்திலேயே இந்த விஷயத்தை பார்க்க வேண்டும். ஆக, காமின் குமாரனாகிய கானானின் சந்ததி பின்னாளில் எப்படி சீர்கேடாக இருக்கப்போகிறது என்பதை காண்பிக்கும் வண்ணம் முன்மொழியப்பட்ட காரியமாகவே இது உள்ளதாக தெரிகிறது.

14. தன் தகப்பனுடைய நிர்வாணத்தை கண்டு, அதை பரியாசம் செய்ததுதான் காம் செய்த பொல்லாப்பு. சேம் மற்றும் யாப்பேத் ஆகிய நோவாவின் மற்ற இரண்டு குமாரரும் தங்கள் தகப்பனுக்கு காண்பிக்க வேண்டிய தகுந்த மதிப்பையும் மரியாதையையும் கீழ்ப்படித்தலையும் காண்பித்தார்கள். ஆகவே இந்த கண்ணோட்டம் வேதாகம கருத்து செறிவிற்கு இணக்கமாகவே உள்ளது. நமக்கு கிடைத்த வெளிச்சத்தில் நாம் இதுவரை புரிந்து கொண்ட காரியங்கள் இவைகளாகும்.

*இங்கு பரிமாறப்பட்ட சத்திய கருத்துக்கள் மணவாட்டி சபை அங்கத்தில் தங்களுடைய ஓட்டத்தை ஓடினவர்களின் எழுத்து படைப்புகளிலிருந்து, அதுவும் குறிப்பாக சபையின் பாத அங்கங்களாக ஓடின சகோதரர்களின் எழுத்து படைப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும்.*